Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 714/2023 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW1 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | மகாலட்சுமி |
| Father's Name | – | க/பெ பிரதீப் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 05th January 2024.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

A1 produced. A2 present.

**முதல் விசாரணை** :

நான் தற்போது குஞ்சிபாளையத்தில் குடியிருந்து கொண்டு ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.08.2023 அன்று இரவு 8 மணிக்கு மேல் உணவு அருந்திவிட்டு உறங்கிவிட்டோம். இரவு 1 மணிக்கு மேல் பின் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு நானும் என் கணவரும் எழுந்து மின் விளக்குகளை எரியவிட்டு நான் பின்புறம் சென்று கதவைத் திறந்துபார்க்கும்போது, திடீரென வந்த இருவரும் அறுவாள், கத்தியைக் காட்டி கழுத்தில் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை இழுத்து பிடுங்கிக்கொண்டு தப்பி ஓடினர். நானும் என் கணவரும் திருடன், திருடன் என சத்தம் போட்டோம். அதற்குள் இருவரும் இருட்டில் ஓடி மறைந்துவிட்டனர். அருகில் உள்ள பக்கத்து வீட்டுக்காரர்கள் உதவிக்கு வந்தனர். நாங்கள் அனைவரும் தேடிப்பார்த்தோம்.

அருகில் உள்ள செந்தில்கவுண்டர்என்பவரது தோட்டத்தில் வள்ளியம்மாள் என்பவரின் கழுத்தில் அணிந்திருந்த தங்கச் சங்கிலியைப் பறிக்க முயற்சி செய்யும்போது அவர்கள் சத்தம் போடவே அங்கிருந்து ஓடினார்கள். அருகில் இருந்த கிணற்றில் இருந்து காப்பாற்றுங்க, காப்பாற்றுங்க என சத்தம் கேட்டு அருகில் இருந்தவர்கள் சென்று பார்த்தனர். அவர்கள் இருவரும் தங்கச் சங்கிலியைப் பறித்துச் சென்று ஓடிய நபர்கள் எனத் தெரியவந்தது. ஆஜர் எதிரிகள் இருவரும்தான் என் நகையைப் பறித்த நபர்கள் ஆவார்கள். அவர்களில் ஒரு நபர் கிணற்றில்இருந்து மேலே ஏறிவந்தவரைப் பிடித்துவிட்டனர். மற்றவர் கிணற்றின் ஆழத்தில் விழுந்துவிட்டதால் அவரால் மேலே ஏறிவர இயலவில்லை. எனவே பொதுமக்கள் தீயணைப்பு துறைக்கு தகவல் தெரிவித்தனர்.

தீயணைப்புதுறையினர் வந்து அவரையும் மீட்டனர். அவர்கள் இருவரையும் மற்றும் அவர்களிடம் இருந்து கைப்பற்றிய நகைகளையும் காவல்நிலையம் சென்று சுமார் 8 மணியளவில் ஒப்படைத்தோம். பின்பு சம்பவம் குறித்து காவல்நிலையத்தில் புகார் அளித்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் **அசாஆ.1** ஆகும். நான் காவல்நிலையத்தில் நகைகளை ஒப்படைத்த நகையை போலிசார் படிவம் 91 ன் மூலமாக கைப்பற்றினர். படிவம் 91 ல் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது. அந்த கையொப்பம் **அசாஆ.2** ஆகும்.

தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நகை என்னுடையதுதான். அது எதிரிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட நகையாகும். அந்த புகைப்படம் (3 எண்ணிக்கை) **அசாஆ.3** ஆகும்.தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள அறுவாள் கத்தியால்தான் ஆஜர் எதிரிகள் என்னை மிரட்டினர் அந்த அறுவாள் கத்தி **அசாஆ.4** ஆகும். பின்னர் நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துஎன் நகையைப்

பெற்றுக்கொண்டேன். தற்போது என்னிடம் காட்டப்படும் அறுவாள்தான் சம்பவத்திற்கு பயன்படுத்தியதாகும். அது **சாபொ.1** ஆகும். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**1ம்எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் இரவு 1 மணிக்குமேல் நடந்தது. சம்பவ சமயத்தில் பின் கதவைத் திறக்கும்போது மின் விளக்குகள் எரிந்துகொண்டிருந்தது. நாங்கள் செல்லும்போது அனைத்து மின் விளக்கு ஸ்விட்சுகளையும் போட்டுவிட்டுதான் சென்றோம். எதிரிகள் எங்கள் வீட்டைத் தட்டும்போது முகமூடி அணிந்திருந்தார்களாரா என்றால் இல்லை. என்னை முதலில் கத்தியைக் காட்டி மிரட்டியவர் தற்போது நீதிமன்ற ஆஜரில் உள்ள நீலக்கலர் சட்டை போட்ட 2ம் எதிரி ஆவார். என்னிடம் இருந்து தங்கச் சங்கிலி பறிக்கப்பட்டது. அந்த தங்கச் சங்கிலியில் ஹுக் இருந்ததா என்றால் இருந்தது.

எதிரி இழுத்து பறிக்கும்போது எனக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை. பொதுவாக ஒரு 6 பவுன் செயினை கழுத்தில் இருந்து இழுக்கும்போது காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான், ஆனால் தாலிக்கயிற்றை அதனுடன் இணைத்துள்ளதால் எனக்கு காயம் ஏற்படவில்லை, ஆனால் லேசாக எரிச்சல் இருந்தது. அதற்காக நான் மருத்துவரை அணுகவில்லை. என்னுடைய தங்கச் சங்கிலியில் கயிறு எதுவும் இணைக்கப்படவில்லை. சாய்பாபா படம் போட்ட டாலர் இருந்தது. அந்த டாலருடன்தான் எதிரிகள் எனது செயினைப் பறித்துச் சென்றார்கள் என்றால் சரிதான்.

தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் சாய்பாபா படம் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகளை சம்பவம் முடிந்தபின்பு அருகில் உள்ள இடங்களில் சுமார் 1 மணி நேரத்திற்கு மேல் தேடினோம். நாங்கள் தேடிய இடங்களில் மின் விளக்கு இல்லை என்றால் சரியல்ல, ஒரு சில இடங்களில் இருந்தது. வள்ளியம்மாள் கழுத்தில் இருந்த செயினை எதிரிகள் பறிக்க முயற்சி செய்யும் போது நேரம் என்னவென்றால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை.

புகார் அளிக்க காவல்நிலையத்திற்கு காலை 8 மணிக்குச் சென்றோம். நான் என் கைப்படத்தான் புகாரை எழுதிக்கொடுத்தேன். என்னுடன் என் கணவர் மற்றும் பக்கத்து வீட்டுக்காரர்கள் வந்திருந்தனர். முதல் தகவலறிக்கையின் நகலை புகார் அளித்த அன்று மாலை என்னிடம் கொடுத்துவிட்டனர். சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகளை கிணற்றின் அருகே அடையாளம் காட்டினேன் என கூறியுள்ளேன் என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கும் மேற்படி கிணற்றிற்கும் ½ கிமீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். கிணற்றின் அருகே மின் விளக்கு இருந்ததா என்றால் இருந்தது.

கிணற்றில் இருந்து மேலே தற்போது நீதிமன்றத்தில் ஆஜர் எதிரிகளில் 2ம் எதிரி நீல நிறச் சட்டை அணிந்துள்ள நபர்தான் முதலில் வந்தார். எதிரிகளை யார் காவல்நிலையத்திற்குச் சென்று ஒப்படைத்தார்கள் என்றால் அங்கிருந்த நபர்களுடன் நாங்களும் ஒப்படைத்தோம். என்னிடம் கத்தியைக் காட்டி மிரட்டியவர்தான் செயினையும் பறித்துச் சென்றார். சம்பவம் நடைபெற்ற இடத்திலோ அல்லது கிணற்றின் அருகிலோ கண்காணிப்பு கேமரா இருந்ததா என்றால் அது பற்றி தெரியாது. சம்பவம் நான் சொல்வது போல் நடக்கவில்லை என்றாலும் நடக்காத சம்பவத்திற்கு எதிரிகள் மீது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னை மிரட்டும் போது ஆஜரில் உள்ள 2ம் எதிரி கையில் தான் சாபொ.1 வைத்திருந்தார்.

**2ம்எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது வீடு வடக்குப்பார்த்த வாசலில் உள்ளது என்றால் சரிதான். பின்பக்க கதவு கிழக்கு வாசலாகும். எனக்குச் சத்தக் கேட்கும்போது நான் படுக்கை அறையில் உறங்கிக்கொண்டிருந்தேன். எங்கள் படுக்கை அறை மேற்கு பகுதியில் உள்ளது. சத்தம் கேட்கும்போது சுமார் 1 மணிக்கு மேல் இருக்கும். அப்போது எங்கள் வீட்டில் நான், என் கணவர், மற்றும் எனது மகள் ஆகியோர் இருந்தோம். சம்பவத்தின்போது மின் விளக்கை எரியவிட்டுதான் கதவைத் திறந்து பார்த்தோம். பார்த்தவுடன் எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. நான் பின்புறம் வந்தேன். என்னிடம் கத்தியைக் காண்பித்து தங்கச் சங்கிலியை பறித்து சென்றார்கள்.

பறித்து சென்றவுடனேயே நான் சத்தம் போட்டேன், உடனே அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் வந்தார்கள். எங்கள் வீட்டில் இருந்து குஞ்சிபாளையம் மெயின் ரோடு சிறிது துாரத்திலேயே உள்ளது. சுமார் 1 ½ மணி நேரம் கழித்து கிணற்றருகே சென்று ஆஜர் எதிரிகளைப் பார்த்தோம். நாங்கள் செல்லும்போது ஆஜர் எதிரிகளில் ஒருவரை பிடித்துக்கொண்டு இருந்தார்கள். சம்பவத்தின்போது ஆஜர் எதிரிகள் என்ன கலர் உடை அணிந்திருந்தார்கள் என்றால் வேஷ்டியும் , சட்டையும், டவுசரும் அணிந்திருந்தார்கள். ஒருவர்தான் கத்தி வைத்திருந்தார். நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் போலிசார் கேட்டுக்கொண்டதால் நான் பொய்யாக புகார் அளித்தேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d.Tr.E.Pragasam.,B.A.B.L.,)

Judicial Magistrate No. II,
Pollachi.